நாள்: 10.02.2026.
O.S. No. 22/2022
பெயர்: முஜிபுர் ரஹ்மான், த/பெ. அப்துல் ரகிம்.
வா.சா.2

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நான் இவ்வழக்கில் தரப்பினராக இல்லை என்றாலும், எனது மனைவிக்காக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரிதான். எனது மனைவி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை விபரங்கள் என்னவென்றால் அவர் எதிர்வழக்குரையில் எனது மனைவி பெயருக்கு நான் செய்துள்ள செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். அவ்வாறான, விபரங்களை எதிர்வழக்குரையில் அவர் கூறவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி 24.02.2022-ம் தேதி அவரது சொத்தை அளவையர் வைத்து அளந்தார் என்றால் சரிதான். அவ்வாறு அளந்தபோது பிரதிவாதியின் சொத்து எங்களது ஆக்கிரமிப்பில் இருந்த விபரம் தெரியவந்தது என்றால் இல்லை, சொத்தை அவர் கிரயம் பெறுவதற்கு முன்பே பிரதிவாதிக்கு தெரியும். நான் வழக்கிற்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வழக்கு சொத்தை அளந்து பார்த்த பின்னர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தார் என்றால் உடனே செல்லவில்லை இரண்டு மாதங்களுக்கு பிறகு தான் சென்றார். அவ்வாறு, புகார்அளித்த பின்னர் காவல் ஆய்வாளர் வழக்கு சொத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான். வழக்கிற்காக அளந்து பார்த்த இரண்டு மாதங்களுக்கு பிறகு புகார் அளித்ததாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆய்வாளர் வந்து பார்த்த போது வழக்கு சொத்தில் வேலி இல்லை என்றால் சரிதான். பிரதிவாதி நாங்கள் ஆக்கிரமித்துள்ள இடத்தை மீட்டுத்தரச்சொல்லி 2022-ம் வருடம் மார்ச் மாதம் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு, வழக்கு தாக்கல் செய்த பின்பு ஊர்க்காரர்களை அழைத்து பேசி சம்மத உடன்படிக்கை பிரதிவாதியிடம் எனது மனைவி செய்துகொண்டார் என்றால் சரிதான், ஆனால் அது மிரட்டி செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை ஆகும். அவ்வாறு மிரட்டியதாக போலிசாரிடம் புகார் அளித்தேனா என்றால் மிரட்டியதே போலிசார் தான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அந்த உடன்படிக்கையில்,

வேலி உள்ள பக்கத்தை எங்களது அனுபோகத்தில் வைத்து கொள்வதாகவும் பிரதிவாதி அனுபோகத்தில் உள்ள மதில் சுவர் உள்ள பக்கத்தை பிரதிவாதிகள் வைத்துக்கொள்வதாக உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி செயல்படாமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டதால் தான் பிரதிவாதி வழக்கை சரி செய்து தாக்கல் செய்வதில் தாமதம் ஏற்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***
District Munsif -Cum- Judicial Magistrate,
Nannilam.